www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# மெல்ல கற்கும் மாணவர்களுக்கான கற்றல் கையேடு

## 10 ஆம் வகுப்பு - தமிழ்

- ஒரு மதிப்பெண் வினா- **விடை**

## பலவுள் தெரிக ( வினா எண் 1 முதல் 11 வரை )

1) மெத்த வணிகலன் என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது

வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்

2) .காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் குறிப்பது

சருகும் சண்டும்

3) .எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.

எம் + தமிழ் + நா

4) .கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது. - இத்தொடரில் தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே

பாடல் , கேட்டவர்

5.) வேர்க்கடலை , மிளகாய்விதை , மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை

மணி வகை

6) .உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்

உனக்குப் பகழ்ச்சிகள் கூறுகிறோம்- இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள்

மோனை , எதுகை

7) .செய்தி 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15 உலகக் காற்று நாள்

செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாவது இடம்

செய்தி 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்தி கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்

செய்தி 1 , 3 ஆகியன சரி

8) பாடுஇமிழ் பனிக்கடல் பருகி -என்னும் முல்லைப்பாட்டு உணர்த்தும் அறிவியல் செய்தி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கடல்நீர் ஆவியாகி மேகமாதல்

9) .பெரியமீசை சிரித்தார் - கோடிட்ட சொல்லுக்கான தொகை

அன்மொழித்தொகை

10) பொருந்தும் விடைவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) கொண்டல் -1.மேற்கு

ஆ) கோடை - 2.தெற்கு

இ) வாடை - 3.கிழக்கு

ஈ) தென்றல் - 4.வடக்கு

3 , 1 , 4 , 2

11) பின்வருவனவற்றுள் முறையான தொடர்

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

12) 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' - என்னும் அடியில் பாக்கம் என்பது

சிற்றூர்

13) அறிஞருக்கு நூல் , அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாய் அமைவது.

வேற்றுமை உருபு

14) காசிக் காண்டம் என்பது

காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

15) 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் , தன் கருங்கோட்டுச் சீறி யாழைப் பணயம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு'. இச் செய்தி உணர்த்தும் விருந்து

இன்மையிலும் விருந்து

16) உனதருளே பார்ப்பன் அடியேனே - யாரிடம் யார் கூறியது

இறைவனிடம் குலசேகராழ்வார்

17) .தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

தலைப்பு: செயற்கை நுண்ணறிவு

www.Padasalai.Net

குறிப்பு: கண்காணிக்கும் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காட்டுகிறது.

தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

18) பரிபாடல் அடியில் ‘விசும்பும் இசையும்’ என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?

வானத்தையும் பேரொலியையும்

19).குலசேகராழ்வார் வித்துவக்கோட்டம்மா என்று ஆண்தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார்.

பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார்.

இத்தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதி முறையே

பால் வழுவமைதி , திணை வழுவமைதி

20) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

இலா

21) .’மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்’ என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

சங்ககாலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

22) அருந்துணை என்பதைப் பிரித்தால்

அருமை + துணை

23) .’இங்கு நகரப்பேருந்து நிற்குமா?” என்று வழிப்போக்கர் கேட்டது _____ வினா.

”அதோ, அங்கே நிற்கும்” மற்றொருவர் கூறியது ______ விடை.

அறியா வினா , சுட்டுவிடை

24) .அருளைப் பெருக்கி, அறிவைத் திருத்தி

மருளை அகற்றி மதிக்கும் தெருளை - இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

கல்வி

25) .இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ______ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ____

மன்னன் , இறைவன்

26) .குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்

குறிஞ்சி , மருதம் ,நெய்தல் நிலங்கள்

www.Padasalai.Net

27)கூற்று 1 : போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.

கூற்று 2: அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது.

கூற்று 1 மற்றும் 2 சரி

28) .மலர்கள் தரையில் நழுவும். எப்போது?

தளரப் பிணைத்தால்

29) தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது - இத்தொடருக்கான வினா எது?

கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது ?

30) .கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அங்கு வறுமை இல்லாததால்

31) .சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.

உழவு , ஏர் , மண் , மாடு

32) மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்.

மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் முறையே

திருப்பதியும் திருத்தணியும்

33) .தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன் என்னும் மெய்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்

நெறியோடு நின்று காவல் காப்பவர்

34) .இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்

வலிமையை நிலைநாட்டல்

35) .தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி.கருதியது

சிலப்பதிகாரம்

36) .மேன்மை தரும் அறம் என்பது

கைமாறு கருதாமல் அறம் செய்வது

37) 'வீட்டைத் துடைத்துச் சாயமடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது

இடையறாது அறப்பணி செய்தலை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

38) .உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்

அதியன் , பெருஞ்சாத்தன்

39) .காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்றுள்ள தொடர்

இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது

40) சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்

அகவற்பா

41) .இவள் தலையில் எழுதியதோ

கற்காலம் தான் எப்போதும் - இவ்வடிகளில் கற்காலம் என்பது

தலையில் கல் சுமப்பது

42) சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக செயகாந்தன் கருதுவது

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

43) .பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ------------ , ------------- வேண்டினார்.

கருணையன் , எலிசபெத்துக்காக

44) .வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி

உருவகம்

45) .கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது

சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா
இலைகளின் மீதும் நீரலைகளின் மீதும் உராய்ந்து மிகுந்த
ப்ராண- ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு

1) இப்பாடல் இடம்பெற்ற நூல் - காற்றே வா

2) இப்பாடலின் ஆசிரியர் - பாரதியார்

3) ப்ராண- ரஸம் பொருள் - உயிர்வளி

4) இப்பாடலில் அமைந்துள்ள சீர் மோனையை எழுதுக. ம - கரந்த ம-னத்தை

பகுதி 2 இல் வினா எண் 16 அல்லது 17 க்கு - மதிப்பெண்கள் : 2

1) விடைக்கேற்ற வினா அமைக்க.- கடைசி எழுத்து மெய்யாக இருந்தால் ( ர்) அதில் உள்ள புள்ளியை நீக்கிவிட்டு துணைக்கால் இடவும் ( ர்- ரா) எ- கா இயற்றினார் ----- இயற்றினாரா ?

அ - நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச்செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.

யாருடைய ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச்செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.?

ஆ- ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம் புல மக்களாலும் அமையப்பெறும்.

*பொதுமக்களாலும் அதன் இலக்கியம் புல மக்களாலும் அமையப்ப*ெறுபவை எவை ?

இ- 18 ஆம் நூற்றாண்டு வரை வடமொழி நூல்கள் பல தமிழிலே ஆக்கப்பட்டன..

எந்த *நூற்றாண்டு வரை வடமொழி நூல்கள் பல தமிழிலே ஆக்கப்பட்டன.?*

ஈ- வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது.

வீரத்தைப் போலவே கொடையையும் விரும்பியவர்கள் யார் ?

( இது போன்ற விடைக்கேற்ற பகுதிகளைப் பயிற்சி அளிக்கவும் )

பகுதி 3 இல் வினா எண் : 39 க்கு - மதிப்பெண்கள் :5

கடிதம்

1) உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம்

அனுப்புநர் :

சே. இராமன்,

101/22, தெற்குரத வீதி,

அஅஅஅஅ.

பெறுநர் :

உணவுப் பாதுகாப்பு ஆணையர்,

உணவுப் பாதுகாப்பு ஆணையம்,

ஆஆஆஆஆ.

ஐயா,

பொருள் : உணவு விடுதி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கடிதம்.

வணக்கம், இன்று காலை மேலவீதியில் உள்ள தனியார் உணவு விடுதியில் காலை உணவு சாப்பிட்டேன். அவ்வுணவு தரம் இல்லாமலும் விலை அதிகமாகவும் இருந்தது. அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டேன். எனவே அந்த உணவு விடுதி மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

இடம் : அஅஅஅஅ.
இப்படிக்கு

www.Padasalai.Net

நாள் : 15-5-2021

தங்கள் உண்மையுள்ள

சே.இராமன்

உறைமேல் முகவரி :

பெறுநர் :

உணவுப் பாதுகாப்பு ஆணையர்,

உணவுப் பாதுகாப்பு ஆணையம்,

ஆஆஆஆஆஆ.

2) மாநில அளவில் நடைபெற்ற , மரம் இயற்கையின் வரம் என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசுபெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

அஅஅஅஅ

15-5-2021

அன்புள்ள தோழனுக்கு,

நலம். நலமறிய ஆவல். மாநில அளவில் நடைபெற்ற, " மரம் இயற்கையின் வரம் " என்னும் தலைப்பில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் நீ கலந்து கொண்டு வெற்றிபெற்றதை அறிந்து மிக்க மகிழ்ச்சி.

இதனைப் போலவே இன்னும் பல வெற்றிகள் பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு

www.Padasalai.Net

உன் அன்பு தோழன்

உறைமேல் முகவரி :

ச. சந்திரன்,

132, காந்தி நகர்,

அஅஅஅஅ.

3) நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம்.

அனுப்புநர் :

வி. கார்த்திக்,

18, கணபதி நகர்,

அஅஅஅஅ.

பெறுநர் :

நாளிதழ் ஆசிரியர்,

தினமணி நாளிதழ்,

சென்னை

ஐயா,

பொருள் : பொங்கல் மலரில் கட்டுரை வெளியிட வேண்டி கடிதம்.

வணக்கம் நான் அஅஅஅஅ கணபதி நகரில் வசித்து வருகிறேன். தாங்கள் இதழில் வெளிவந்த விளம்பரத்தைப் பார்த்தேன்.அதில் குறிப்பிட்டவாறு, உழவுத் தொழிலுக்கு வந்தணை செய்வோம் என்ற தலைப்பில் கட்டுரை அனுப்பியுள்ளேன். அதனைப் பொங்கல் மலரில் வெளியிட வேண்டுமாய் பணிவுடன் வேண்டுகிறேன்.

இப்படிக்கு

வி.கார்த்திக்.

இணைப்பு : கட்டுரை

உறைமேல் முகவரி :

*பெறுநர் :*

*நாளிதழ் ஆசிரியர்,*

*தினமணி நாளிதழ்,*

*சென்னை.*

4) பழுதுபட்ட மின்விளக்குகளைச் சரிசெய்ய வேண்டி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம்.

அனுப்புநர் :

*வி. கார்த்திக்,*

18, *கணபதி நகர்,*

*அஅஅஅஅ.*

பெறுநர் :

மின்வாரிய அலுவலர்,

தமிழ்நாடு மின்வாரியம்,

ஆஆஆஆஆ.

ஐயா,

பொருள் : பழுதுபட்ட மின்விளக்குகளைச் சரிசெய்யவேண்டி, கடிதம்

வணக்கம், நான் அஅஅஅஅ கணபதி நகரில் வசித்து வருகிறேன். இங்குள்ள பகுதிகளில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன.இரவில் நடந்து

www.Padasalai.Net

செல்பவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே மின்விளக்குகளைச் சரி செய்யும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

வி.கார்த்திக்.

உறைமேல் முகவரி :

பெறுநர் :

மின்வாரிய அலுவலர்,

தமிழ்நாடு மின்வாரியம்,

ஆஆஆஆஆ

மொழியோடு விளையாடு ( வினா எண் 22 முதல் 28 வரை )

இயல் -1

சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.

தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை

தேரும் சிலப்பதி காறமதை

ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்

ஓதி. யுனர்ந்தின் புருவோமே

விடை :

தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை

தேறும் சிலப்பதி காரமதை

ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம்

www.Padasalai.Net

## ஓதி யுணர்ந்தின் புறுவோமே.

கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.

1) கல் - குவியல், பழம் - குலை, புல் - கட்டு, ஆடு - மந்தை.

வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.

1) கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள். விடை : கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருப்பவரை, அழைத்து வாருங்கள்.

2) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார். விடை : ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்

3) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர். விடை : நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.

4) பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தார். போட்டித் தேர்வில் வென்றார். விடை. பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித்தேர்வில் வென்றார்.

தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.

1). உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் புசித்தலைப்போல,இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற் படுகின்றனர். விடை : புவியில் வாழும் மனிதர்களில் சிலர் பழம் இருக்கக் காய் உண்**பதை**ப் போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசித் துன்பப்படுகின்றனர்.

2) வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த புலவனுக்குத் தனது தலையைக் கொடுத்துமங்காப் புகழ் பெற்றான். விடை : வள்ளல் குமணன் ஏழ்மையால் வாடிவந்த கவிஞனுக்குத் தனது தலையைத் தந்து மங்காப் **பேறு** பெற்றான்.

3) நளனும் அவனது துணைவியும் நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை முகில் கண்ட மஞ்ஞை போலக் களி கொண்டனர். விடை : நளனும் அவனது மனைவியும் நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு,அந்நாட்டு மக்கள் மழைமேகம் கண்ட மயில் போல மகிழ்ச்சி கொண்டனர்.

4) சோலையிற் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன.

விடை : பூங்காவிற் பூத்த மணமலர்களில் வண்டுகள் மொய்த்துப் பண்பாடித் தேன் உண்டன.

5) பசுப்போல் சாந்தமும் புலிபோல் தீரமும் யானை போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**விடை**. ஆ போல் அமைதியும் வேங்கை போல் வலிமையும் வேழம் போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

www.Padasalai.Net

1) தேன், விளக்கு, மழை,விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ

விடை : தேன்மழை, **பொன்**விளக்கு, பொன் மணி, **பூ**விலங்கு, **பொன்செய்**,, மணிமேகலை, வான்மழை, பூமழை, **பூமணி**

குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.

குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச்சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறைநாள்.

. மனிதன் சுவைக்காத இளநீர் உலகில் உண்டோ?

காப்பியச்சுவையில் மயங்காத தமிழர்கள் உண்டோ ? மனிதகுல மேன்மையைப் பற்றிக் கூறாத இலக்கியமும் உண்டா ? மாணவருக்கு இன்பத்தைத் தராத விடுமுறை நாளும் உண்டோ ?

எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.

நாற்றிசை. - நான்கு. - ச ; எண்சாண். - எட்டு. - அ

ஐந்துசால்பு. - ஐந்து. - ரு ; நாலும் இரண்டும் - நான்கு, இரண்டு - ச, உ. ஆயிரம் - கooo

அகராதியிற் காண்க

அடவி - காடு, அவல் - பள்ளமான நிலம், சுவல் - மேடான நிலம். செறு - வயல், பழனம் - வயல். புறவு - தோட்டம், புறா

....................................

இயல் -2:

சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.

1) முதல் எழுத்தை நீக்கினாலும் வாசனை தரும், நீக்காவிட்டாலும் வாசனை தரும். விடை : நறுமணம்.

2) பழமைக்கு எதிரானது. எழுதுகோலில் பயன்படும். விடை. : புதுமை

3) இருக்கும்போது உருவமில்லை, - இல்லாமல் உயிரினம் இல்லை விடை : காற்று

4) நாலெழுத்தில் கண் சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும். விடை : விண்மீன்

5) ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம். விடை : காடு

சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.

எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்

எழுகதிர் - வினைத்தொகை. ; எழுகதிரைக் கண்டவுடன் தாமரைமுகம் மலர்ந்தது. கீரிபாம்பு - உம்மைத்தொகை ; கீரியும் பாம்பும் எதிரிகள். பூங்குழல் வந்தாள் - அன்மொழித்தொகை ; பூங்குழல் பூரிப்போடு வந்தாள். மலை வாழ்வார். - ஏழாம் வேற்றுமை தொகை ; மலை வாழ்வார் மகிழ்ச்சியுடன் வாழ்வார்.
முத்துப்பல் - உவமைத்தொகை ; முகத்திற்கு அழகு சேர்ப்பது முத்துப்பற்களே.

அகராதியில் காண்க.

அகன்சுடர் - சூரியன் ஆர்கலி - கடல் கட்புள் - காகம் கொடுவாய் - புலி திருவில் - வானவில்.

...............................................

இயல் - 3

பழமொழிகளை நிறைவு செய்க.

1) உப்பில்லாப் .................... பண்டம் குப்பையிலே.
2) ஒரு பானை.................. .சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
3) உப்பிட்டவரை .......... ..... உள்ளளவும் நினை.
4) விருந்தும் .................மருந்தும் மூன்று நாளைக்கு.
5) அளவுக்கு ............... மீறினால் அமிர்தமும் நஞ்சு.

விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடிக்க.

1) இறகு - பறவையிடம் இருப்பது. 2) குருதி - சிவப்பு நிறத்தில் இருக்கும். 3) வாள் - மன்னரிடம் இருப்பது . 4) அக் கா - தங்கைக்கு மூத்தவள். 5) மதி - அறிவின் மறுபெயர். 6) படகு - நீரில் செல்வது .

நூலின் பெயர் : திருக்குறள்.

இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

தொடு - தோடு, மடு - மாடு, மலை - மாலை, வளி - வாளி, விடு - வீடு.

1) தோடைத் தொடு. 2) மடுவில் மாடு மேய்ந்தது. 3) மாலையில் மலை அழகு. 4) வாளியில் வளியைத் தேடினார். 5) பள்ளி விட்டு வீடு செல்க.

அகராதியில் கண்டு பொருள் எழுதுக.

அ) ஊண் - உணவு ; ஊன் - இறைச்சி, தசை ஆ) திணை - ஒழுக்கம் ; தினை - தானிய வகை. இ) அண்ணம் - மேல்வாய் ; அன்னம் - பறவை ஈ) வெல்லம் - இனிப்புப்பொருள் ; வெள்ளம் - நீர்ப்பெருக்கு

............................................

இயல் -4

கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

அ) கொடு - கோடு கொடுப்பதற்கு எல்லைக் கோடு இல்லை. ஆ) கொள் - கோள் நல்ல உறவுகளைக் கொள்க, கோள் சொல்வதைத் தவிர்க்க. இ) சிறு - சீறு சிறுமை கண்டு சீறுக. ஈ) தான் - தாம் தான் என்றால் உதடுகள் ஒட்டாது, தாம் என்றால் ஒட்டும். உ) விதி. - வீதி சாலை விதிகளை வீதியில் செல்வோர் மதிக்க வேண்டும்

தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.

1) நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன்............ கற்றல். 2) விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை........... .கரு. 3) கல் சிலை ஆகுமெனில், நெல்.........ஆகும். ............ சோறு. 4) குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து ................ எழுத்து. 5) மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது. .............. பூவில்.

குறிப்புகளைப் பயன்படுத்தி விடைதருக. ( குறிப்பு -எதிர்மறையான சொற்கள்). மீளாத் துயர் - மீண்ட இன்பம் கொடுத்துச் சிவந்த. - கொடாமல் கருத்த மறைத்துக் காட்டு - வெளிப்படுத்தி மூடு அருகில் அமர்க. - தொலைவில் நிற்க. பெரியவரின் அமைதி - சிறியவரின் கூச்சல் புயலுக்குப் பின். - தென்றலுக்கு முன்

கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.

1) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார். - கால வழுவமைதி. 2) அவனும் நீயும் அலுவலரைப் பார்க்க ஆயத்தமாகுங்கள். - இட வழுவமைதி 3) " இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அதை அனைவரும் ஏற்பர் " என்று கூறினான். - இட வழுவமைதி. 4) சிறிய வயதில் இந்த மரத்தில் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம்-.கால வழுவமைதி 5) இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்திருக்கிறார். - கால வழுவமைதி.

அகராதியில் காண்க.

அவிர்தல் - ஒளிர்தல் ; அழல். - நெருப்பு உவா - முழுநிலா ; கங்குல் - இரவு. கனலி. - சூரியன்.

..................................................



www.Padasalai.Net

இயல் - 5

தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.

1) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும். -

குளிர்ந்த நிழல் தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

2) வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது -

இனிமையான வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

3) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும். -

சிறந்த கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

4) குழந்தைகள் தனித்தனியே எழுதித்தரவேண்டும் -

சின்னஞ்சிறு குழந்தைகள் தனித்தனியே எழுதித்தரவேண்டும்.

அகராதியில் காண்க.

மன்றல் - திருமணம்
அடிச்சுவடு - அடித்தடம்.
அகராதி - அகர வரிசையிற் பொருள் விளக்கும் நூல்
தூவல் - இறகு
மருள். - மயக்கம்

..................................

இயல் - 6

பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றி எழுதுக.

கோல்டு பிஸ்கட் - தங்கக் கட்டி
யூஸ் பண்ணி - பயன்படுத்தி
வெயிட் - எடை
ஈக்வலாக - சமமாக
பட் - ஆனால்
எக்ஸ்பெரிமெண்ட்டை - பரிசோதனையை
ரிப்பீட் - மீண்டும்
ஆன்சரை - விடையை
ஆல் தி பெஸ்ட் - வாழ்த்துகள்

தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.

1) வானம்...கருக்கத்...தொடங்கியது. மழை வரும்போலிருக்கிறது.

2) அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம்..... சிவந்தது.

3) .....வெள்ளை...மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.

4) கண்ணுக்குக் குளுமையாக இருக்கும்... பசுமைப்....புல்வெளிகளில் கதிரவனின் ....மஞ்சள்... வெயில் பரவிக்கிடக்கிறது.

5) வெயிலில் அலையாதே உடல்..... கருத்துவிடும்.

பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.

1) விரட்டாதீர்கள் - பறவைக்கு மரம் வீடு.
வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவைதரும் மரவீடு

2) காலை ஒளியினில் மலரிதழ் - அவிழும் சோலைப் பூவினில் வண்டினம் - கவிழும்

3) மலை முகட்டில் மேகம் ....தங்கும்...... அதைப் பார்க்கும் மனங்கள் செல்லத்....தயங்கும்...

4) வாழ்க்கையில்...தோற்பவை...மீண்டும் வெல்லும்- இதைத்.
தத்துவமாய்த்....தோற்பாவை... கூத்து சொல்லும்.

5) தெருக்கூத்தில் நடிகருக்குக் கைத்தட்டலே....விருது.....அதில். வரும்காசு குறைந்தாலும் அதுவேயவர்...விருந்து.

அகராதியில் காண்க.

தால் - நாக்கு உழுவை - புலி. அகவுதல் - அழைத்தல் ஏந்தெழில் - மிகுந்த அழகு. அணிமை. - பக்கம்

........................................

இயல் - 7

பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.

இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்.

1) இன்றைய நாளில் மனிதநேயம் இல்லாமல் இருக்கிறது. 2) ஊட்டியில் குளிர் கொஞ்சம் அதிகம். 3) முன்னுக்குப் பின் பதிலளித்ததால் திருடன் மாட்டிக்கொண்டான். 4) வாழ்வில் நடந்த துயரங்களை மறக்க நினைக்கிறேன்.

தொகைச்சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.

மூவேந்தர்கள் - மூன்று + வேந்தர்கள் - ௩. நாற்றிசை - நான்கு + திசை - ச

முத்தமிழ் - மூன்று + தமிழ் - ௩ இருதிணை - இரு + திணை - உ

முப்பால் - மூன்று + பால் - ங ஐந்திணை - ஐந்து + திணை - ரு

நானிலம் - நான்கு +நிலம் - ச அறுசுவை - ஆறு + சுவை - சு பத்துப்பாட்டு - பத்து + பாட்டு - கo
எட்டுத்தொகை - எட்டு + தொகை - அ

ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

புதுக்கோட்டை. - புதுகை திருச்சிராப்பள்ளி - திருச்சி.
உதகமண்டலம் - உதகை கோயம்புத்தூர் - கோவை
நாகப்பட்டினம் - நாகை புதுச்சேரி - புதுவை
கும்பகோணம் - குடந்தை திருநெல்வேலி - நெல்லை.
மன்னார்குடி - மன்னை மயிலாப்பூர் - மயிலை
சைதாப்பேட்டை - சைதை

அகராதியில் காண்க.

மிரியல் - மிளகு வருத்தனை. - பெருக்குதல் அதசி - சணல் துரிஞ்சில் - வெளவால்

..........................

இயல் -8

மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

1) மனக்கோட்டை - படிக்காமல் தேர்வில் வெற்றி பெறலாம் என்று மாணவர்கள் மனக்கோட்டை கட்டக்கூடாது.

2) கண்ணும் கருத்தும். - ரோஜா தன் குழந்தையைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தாள்.

3) அள்ளி இறைத்தல் - நாம் பிறரிடம் பேசும்போது வார்த்தையை அள்ளி இறைத்தல் கூடாது.

4) ஆறப்போடுதல் - சில பிரச்சனைகளை ஆறப்போட்டால் அவை தானாகவே முடிந்துவிடும்.

சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக.

1) வருந்தாமரை வரும் + தாமரை - வருகின்ற தாமரை மலர்.
வருந்தா + மரை - துன்புறாத மான். வருந்து+ ஆ+ மரை. - வருந்தும் பசுவும் மானும்

2) பிண்ணாக்கு பின்+ நாக்கு. - பிளவுபட்ட நாக்கு.
பிண்ணாக்கு மூடன், எண்ணெய் எடுத்த பின்னர் வரும் கழிவு

www.Padasalai.Net

3) பலகையொலி. பல+ கை+ ஒலி

- பல கைகளின் ஒலி பலகை+ ஒலி. - மரப்பலகையின் சத்தம்

அகராதியில் காண்க.

ஆசுகவி - விரைவில் கவிதை இயற்றுவோன். மதுரகவி - காதுக்கும் கருத்துக்கும் இனிமையான கவி பாடுவோன் சித்திரகவி - ஓவியத்துக்குள் உள்ளடக்கி கவிதை பாடுவோன். வித்தாரக்கவி. - விரித்து கவிதை இயற்றுபவர்

...............................

இயல் -9

உவமையைப் பயன்படுத்துச் சொற்றொடர் உருவாக்குக.

1) தாமரை இலை நீர்போல - இராமலிங்க அடிகள் தாமரை இலை நீர்போல உலக வாழ்வில் பற்றற்று இருந்தார்.

2) மழைமுகம் காணாப் பயிர்போல - தன் தாயைப் பிரிந்த குழந்தை மழைமுகம் காணாப் பயிர்போல வாடியது.

3) கண்ணினைக் காக்கும் இமை போல - என் பெற்றோர் என்னைக் கண்ணினைக் காக்கும் இமை போல காத்து வருகிறார்கள்.

4) சிலை மேல் எழுத்து போல - ஆசிரியர் கூறிய அறிவுரை சிலை மேல் எழுத்து போல என்றும் அழியாமல் இருக்கும்.

அகராதியில் காண்க.

குணதரன் - நற்குணமுள்ளவன். செவ்வை - நேர்மை, மிகுதி நகல் - படி, பிரதி
பூட்கை - கொள்கை, வலிமை.

.................

குறுவினாக்கள்

1) ' வேங்கை ' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக .

'வேங்கை' - ' மரம்' ( **தனிமொழி**)

' வேம் + கை - வேகின்ற கை ( **தொடர்மொழி**) .

2.) ' மன்னும் சிலம்பே ! மணிமேகலை வடிவே !

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே ! - இடம்பெற்றுள்ள ஐம்பெரும் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக .

1 . சீவகசிந்தாமணி 2 . வளையாபதி 3. குண்டலகேசி

3.) ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன . ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன . ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன .- மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி , எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக .

ஒரு தொடரில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன . - இது சரி .

ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன - இது தவறு .

ஏனெனில், தாற்றில் தான் வாழைப்பழ சீப்புகள் இருக்கும் .

ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன - இது சரி .

4) .''' உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்

வடுக்காண் வற்றாகும் கீழ் " - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி , அதன் இலக்கணம் தருக .

உடுப்பதூஉம் , உண்பதூஉம் - இன்னிசை அளபெடை

இலக்கணம் : செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும் .

5) . தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக .

காலை நேரம் தொடர்வண்டியில் வநது இறங்கினார் தமிழறிஞர் கி.வா.ஜகநாதன் . அவரை மாலையிட்டு வரவேற்றனர் .அப்போது கி.வா.ஜ "அடடே! காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே!" என்றார்.

6) . ' நமக்கு உயிர் காற்று

காற்றுக்கு வரம் மரம் - மரங்களை

வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம் '- இதுபோன்ற உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.

1. உயிர்களின் சுவாசம் காற்று.

2. காற்றின் சுவாசம் மரம்.

7) . வசன கவிதை - குறிப்பு வரைக .

உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்ட **கவிதை வடிவம்** - . தமிழில் அறிமுகம் செய்தவர் பாரதியார்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

8) . தண்ணீர் குடி , தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக; தொடரில் அமைக்க .

விரித்து எழுதுதல் ;

தண்ணீர் குடி - தண்ணீரைக் குடி

தயிர்க்குடம் - தயிரை உடைய குடம்

வாணி தயிரை உடைய குடத்தை எடுத்தாள்.

9) . பெற்றோர் வேலையிலிருந்து திரும்ப தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக .

தம்பி அழாதே. அப்பா நமக்காக கடலைமிட்டாய் , பழங்கள் வாங்கி வருவார். அழாதே என்று ஆறுதல் கூறுவேன் .

10) .மாஅல் - பொருளும் இலக்கணக்குறிப்பு தருக .

பொருள் : திருமால் . இலக்கணக்குறிப்பு : இசைநிறை அளபெடை .

11) . விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக .

வாருங்கள் , நலமா ? . உட்காருங்கள் நீர் பருகுங்கள் .

12) தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் ஒற்றி எடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி என்பது இலக்கிய செய்தி . விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா ? உங்கள் கருத்தை குறிப்பிடுக .

விருந்தினருக்கு விருந்து படைக்கச் செல்வம் தேவையில்லை . நல்ல மனம் இருந்தால் , நம்மிடம் உள்ளதைக் கொண்டு சிறந்த முறையில் விருந்து அளிக்க முடியும் என்பதாகும் .

13) . ' எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக ' எழுது எழுது என்றாள் ' என அடுக்குத்தொடரானது .' சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும் ?

சிரித்துச் சிரித்துப் பேசினார் ' என்பது அடுக்குத்தொடர்

14) ' இறடிப் பொம்மல் பெறுகுவிர் ' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக .

இறடி - தினை ; பொம்மல் - சோறு - தினைச் சோற்றைப் பெறுவீர்கள் .

15) . பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார் . அவர் யார் ? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை ?

பாரதியார் கவிஞர் - பெயர். நூலகம் சென்றார் - வினை. அவர் யார் ? - வினா. மேற்கண்ட மூன்று தொடர்களில் எழுவாயுடன் பெயர் , வினை , வினா ஆகியவற்றிற்கான பயனிலைகள் தொடர்ந்து வந்து எழுவாய் தொடர்கள் அமைந்துள்ளன .

16) . ' நச்சப் படாதவன் ' செல்வம் - இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக .

நச்சப் படாதவன் - பிறருக்கு உதவி செய்யாதவன் .

17) . கெடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய

கோடிஉண் டாயினும் இல் . - இக் குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக .

கொடுப்பதும் , துய்ப்பதூஉம் - இன்னிசை அளபெடைகள்

18) பொருளுக்கேற்ற அடியை பொருத்துக .

1. உயிரை விட சிறப்பாக பேணி காக்கப்படும் . - உயிரினும் ஓம்பப் படும் .

2 . ஊரின் நடுவில் நச்சு மரம்பழுத்தது போன்றது . - நடு ஊருள் நச்சு மரம் பழுத்ற்று .

3 . ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் . - ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை .

19) எய்துவர் எய்தாப் பழி - இப்படிக்கு பொருந்தும் வாய்பாடு எது ?

கூவிளம் , தேமா , மலர்

20) வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக .

எ.கா : செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள் .

1. கட்டுமான தொழிலாளர்கள் .

2 எரிபொருள் நிலையங்கள் .

21) வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் . _ இத்தொடர் காலவழுவமைதி எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு ?

உறுதித்தன்மையை நோக்கி காலவழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

22 ) மருத்துவத்தில் மருந்துடன் அனபும் நம்பிக்கையும் ஆற்றும் பங்கினை எழுதுக .

மருத்துவர் கத்தியால் அறுத்தாலும் அது நன்மைக்கே என்று நோயாளி மருத்துவரை நேசிப்பார்.

24) . உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றை குறிப்பிடுக .

நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு

www.Padasalai.Net

25). " சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான் . புதியவர்களைப் பார்த்துக் கத்துவனே தவிர கடிக்க மாட்டான் " என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றி பெருமையாகக் கூறினார் .- இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக .

சீசர் என்பது நாயைக் குறிக்கிறது. ஆனால் இத்தொடரில் உயர்திணை வினைகளாக கேட்பான் , கத்துவான், கடிக்க மாட்டான் எனக் கூறப்பட்டுள்ளது . இவை முறையே கேட்கும் , கத்தும் , கடிக்காது எனக் கூறுதல் வேண்டும் .

26) ." கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல் " - இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார் ? காதல்மிகு கேண்மையினான் யார் ?

கழிந்த பெரும் கேள்வியினான் - மன்னன்

காதல்மிகு கேண்மையினான் - புலவர் இடைக்காடனார்

27) . செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத்தொடர்களாக்குக .

கல்வியே அறிவை சீராக்கும் ;

கல்வியே அருளைப் பெருக்கும்.

28) அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக .

அமர்ந்தான் - அமர் + த் ( ந் ) + த் + ஆன்.

அமர் - பகுதி, த் - சந்தி 'ந் ' ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை

ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

29) . தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக .

தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நான் கற்க விரும்பும் மொழி தெலுங்கு. ஏனெனில், அது தேன் போன்ற இனிய மொழியாகும்.

30) இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது ? இதோ.... இருக்கிறதே ! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே ! மின்சாரம் இருக்கிறதா , இல்லையா ?மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக .

மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் உள்ளது ? - அறியா வினா

மின்சாரம் இருக்கிறதா , இல்லையா ? - ஐய வினா

31) .காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும் . இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக .

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

முதற்பொருள் : நிலம் - காடும் காடு சார்ந்த இடமும் - முல்லை

பெரும்பொழுது - கார்காலம். சிறுபொழுது - மாலை.

கருப்பொருள் : உணவு - வரகு .

32) ."கலைஞர் பழுமாக்கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர், படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர் " - பேராசிரியர் அன்பழகனார். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.

கலைஞரைப் பேராசிரியர் அன்பழகனார், பழுமாக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளர் என்றும் படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர் என்றும் பாராட்டியுள்ளார்.

33) . உறங்குகின்ற கும்பகன்ன " எழுந்திராய் எழுந்திராய் "காலதூதர் கையிலே " உறங்குவாய் உறங்குவாய் "கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள் ? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள் ?

"உறங்குகின்ற கும்பகன்னனே! பொய்யான உன் வாழ்வு அழியத் தொடங்கிவிட்டது.அதனைக் காண எழுந்திருப்பாயாக " என்று எழுப்புகின்றனர். எமதூதர் கையில் இனிப் படுத்து உறங்குவாயாக " என்கிறார்.

34) . சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள் - கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக .

ஒல்லியான தண்டில் , மிக மென்மையான மலர் இருப்பது இயற்கையின் வரம் . மலரின் தண்டை விட மலர் பெரியதாக இருந்தாலும் , தண்டு அதனை தாங்கிக் கொள்கிறது . எனவே , மென்மையான அன்பே இந்த உலகைக் காத்து நிற்கிறது.

35) கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக .

உழவர்கள் மலையின் உழுதனர் . முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாரே பரதவர் கடலுக்குச் சென்றார் .

உழவர்கள் வயலில் உழுதனர்.

முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே ஆயர்கள் காட்டிற்குச் சென்றனர்

36) கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக .

தம்மிடம் உள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லவர் " என்பது பொருள் .

37) . தஞ்சம் எளியன் பகைக்கு - இவ்வடி குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக .

சீர் - அசை - வாய்பாடு

தஞ் | சம் - நேர் - நேர் - தேமா

எளி | யன் - நிரை - நேர் - புளிமா

பகைக் | கு - நிரைபு -- பிறப்பு

38) வறுமையின் காரணமாக உதவிகேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன ?

வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடாமல் கொடுப்பவரைக் கண்டால் , இரப்பவரின் உள்ளத்திலே மகிழ்ச்சிப் பொங்கும் .

39) பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார் ? ஏன் என்பதை எழுதுக .

உழைத்தால் கிடைக்கும் ஊதியத்தைக் கூரான ஆயுதம் என்று செந்நாப்போதார் கூறுகிறார்

40) . பாசவர் , வாசவர் , பல்நிண விலைஞர் , உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் வணிகர்கள் யாவர் ?

பாசவர் - வெற்றிலை விற்பவர் .

வாசவர் - ஏலம் முதலான ஐந்து நறுமணப் பொருள்கள் விற்பவர் .

பல்நிண விலைஞர் - பலவகையான இறைச்சி விற்பவர்

உமணர் - வெண்மையான உப்பு விற்பவர் .

41) .மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது ?

அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் நிலைத்து நிற்க ,அழியாத வகையில் அதனை கல்லில் செதுக்கினார்கள்.

42 ) வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம. பொ .சி . என்பதற்கு சான்று தருக .

ம.பொ.சி வறுமையால் பழைய புத்தகங்கள் விற்கும் கடைக்குச் சென்று விருப்பமான புத்தகங்கள் வாங்குவதை வழக்கமாக்கிக் கொண்டார் .

உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்கள் வாங்கிவிட்டு , பல வேளைகளில் பட்டினி கிடந்துள்ளார்

43 ) புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக .

வெட்சி × கரந்தை

வஞ்சி × காஞ்சி

உழிஞை × நொச்சி

44 ) பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியிடுக.

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் .
- ம. பொ .சி .

விடை

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி , சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி ' சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி , நம் அருமைத் தமிழ்நாடு , ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப்போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் .
- ம. பொ .சி .

45.' கொள்வோர் கொள்க ; குரைப்போர் குரைக்க !

உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது '

அ) அடி எதுகையை எடுத்தெழுதுக .

ஆ) இலக்கண குறிப்பு எழுதுக - கொள்க , குரைக்க

அ)அடி எதுகை :கொள்வோர் , உள்வாய்

ஆ )இலக்கண குறிப்பு : கொள்க , குரைக்க - வியங்கோள் வினைமுற்று

46) குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று , இரண்டு அடிகளாய் வரும் .முதலடி நான்கு சீராகவும் ( அளவடி ) இரண்டாம் அடி மூன்று சீராகவும் ( சிந்தடி ) வரும் .

எ.கா :

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் .

47.) குறிப்பு வரைக - அவையம் .

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன . உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்பு பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன .அவை துலாக்கோல் போல நடுநிலை மிக்கது .

48 ) காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது ?

அன்று சாளரத்தைத் தூய்மை செய்த கவிஞர் , இன்று காலக் கழுதை கட்டெறும்பானாலும் வாளித் தண்ணீர் , சாயக் குவளை , கந்தை துணி , கட்டைத் தூரிகை கொண்டு அறப்பணிகள் செய்கிறார் .

49) வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கலோசை ஆகும் . துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது . இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக .

வஞ்சிப்பாவிற்குத் தூங்கல் ஓசையும் , கலிப்பாவிற்கு துள்ளல் ஓசையும் உரியன .

www.Padasalai.Net

50) தீவக அணியின் வகைகள் யாவை ?

தீவக அணி மூன்று வகைப்படும் ;

1 . முதல் நிலைத் தீவகம்

2 . இடைநிலைத் தீவகம்

3. கடைநிலை தீவகம்

51) .நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு . இத்தொடரை இரு தொடர்களாக்குக .

நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் உண்டு .

நான் எழுதுவதற்கு அதற்குரிய காரணமும் உண்டு .

52) "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன் " உவமை உணர்த்தும் கருத்து யாது ?

இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னே தூயமணி போன்ற தூவும் மழை துளி இல்லாமல் வாடி காய்ந்து விட்டதைப் போல " கருணையன் வளர்ந்து ஆளாகும் முன்னரே , தன் தாயை இழந்தது வாடுகின்றான் " என்பதை இவ்வுவமை உணர்த்துகிறது .

53) . அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை. பண்பும் பயனும் அது . - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது ?

இக்குறளில் நிரல்நிறை அணி வந்துள்ளது .

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி , அதே வரிசைப்படி இணைத்துப் பொருள் கொள்ளுமாறு வருவது நிரல்நிறை அணி ஆகும் .

54) ' வாழ்வில் தலைக்கனம் , தலைக்கனமே வாழ்வு ' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார் ?

"தலைக்கனமே வாழ்வு " என சித்தாளுவின் வாழ்வைக் குறிப்பிடுகிறார் .

செங்கற்களை தலையில் சுமந்து செல்லும் சித்தாளுக்கு "தலைக்கணமே வாழ்வாகிப் போனது"

## பகுதி 3 இல் வினா எண் 29 முதல் 33 வரை

சிறுவினாக்கள்

1). தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை ?

செழுமை மிக்க மொழி

எம் உயிர் போன்ற மொழி தமிழ்.



www.Padasalai.Net

பழமைக்கும் பழமையானது. புதுமைக்கும் புதுமையானது.

குமரிக்கண்டத்தில் அரசாண்ட மொழி.

.

2) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' . இது போல் இளம் பயிர் வகை வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

1. வயலில் நெல் நாற்று நட்டேன் .
2. மாங்கன்று வாங்கி நட்டேன் .
3. தென்னம்பிள்ளை வாங்கி வந்தேன்.
4. காட்டில் பனை மடலியைப் பார்த்தேன் .

3) அறிந்தது , அறியாதது , புரிந்தது , புரியாதது , தெரிந்தது , தெரியாதது , பிறந்தது , பிறவாதது இவை அனைத்து ம் யாம் அறிவோம் .அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும் .

இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

1. அறிதல் , அறியாமை
2. புரிதல் , புரியாமை
3. தெரிதல் , தெரியாமை
4. பிறத்தல் , பிறவாமை

4) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக .

தமிழ் :

1. இயல் , இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது .
2. முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது .
3. ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.
4. சங்கப் பலகையில் அமர்ந்து புலவர்கள் காத்தனர். .

கடல் :

1. முத்தினைத் தருகிறது .

2. மூன்று சங்குகளைத் தருகிறது .

3. வணிகக்கப்பல்களை உடையது .

4. அலைகளால் சங்கினைத் தடுத்து காக்கிறது.

5) உயிராக நான் , பல பெயர்களில் நான் , நான்கு திசைகளிலும் நான் , இலக்கியத்தில் நான் , முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் ..... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றி பேசுகிறது . இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றி பேசினால்........ உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

உயிராக நான், ஆறாக நான், குளமாக நான்

உயிர்வாழ அவசியம் நான்

உலகில் மூன்று பங்கு நான்,

நானின்றி உலகில்லை, எத்திசையும் நான்

6) . சோலைக் ( பூங்கா ) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஒரு உரையாடல் அமைக்க .

1. சோலைக் காற்று : நான் இயற்கையானவன் .

மின்விசிறி காற்று ; நான் செயற்கையானவன்

2. சோலைக் காற்று : நான் சோலைகளில் உருவாகின்றேன்

மின்விசிறி காற்று : நான் மின்சாரத்தால் உருவாகின்றேன்.

3. சோலைக் காற்று : நான் விலைமதிப்பற்றவன்

மின்விசிறிக் காற்று : எனக்கு விலை உண்டு. நீயே சிறந்தவன்

7) தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி , வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்தான் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள் . இப்பதியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக .

ஆடு மாடுகளுக்கு - உம்மைத்தொகை, ஆடுகளுக்கும் மாடுகளுக்கும்

பூங்கொடி - உவமைத்தொகை. பூப் போன்ற கொடி

குடிநீர் - வினைத்தொகை. குடித்த நீர் , குடிக்கின்ற நீர் , குடிக்கும் நீர் .

குடிநீர் நிரப்பினாள் - இரண்டாம் வேற்றுமைத் தொகை. குடிநீரை நிரப்பினாள்

7) மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வர்ணித்து எழுதுக .

குறிப்பு : இலைகளில் சொட்டும் நீர்- உடலில் ஓடும் மெல்லிய குளிர் - தேங்கிய குட்டையில் ' சளப் தளப் ' என்று குதிக்கும் குழந்தைகள் - ஓடும் நீரில் காகிதக் கப்பல் .

மழை நின்றவுடன் குளிர்ந்த காற்றை உணர்ந்தேன் . மரங்களின் இலைகளில் ' சொட் சொட்டு ' என வழியும் நீர் துளிகள் . வீட்டை விட்டு வெளியே வந்து அதனைக் காணும் பொழுது உடலில் ஓடும் மெல்லிய குளிரை உணர்ந்தேன் .

இலைகளில் சொட்டும் நீர் அழகு

மேனியில் பரவும் குளிர் அழகு.

குட்டையில் குதிக்கும் குழந்தைகள் அழகு

வீதிகளில் புரளும் மழைநீர் அழகு.

8) மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன் ? விளக்கம் தருக.

∵ பாண்டிய மன்னன் , புலவர் இடைக்காடனார் பாடிய பாடலை தலையை அசைக்காமல் அவமதித்தான் .அதனால் இடைக்காடனார் இறைவனிடம் முறையிட்டார். . மன்னனைத் திருத்த இறைவன் கடம்ப வனத்தை விட்டு வெளியேறி வைகை ஆற்றில் கோவில் அமைத்து அங்கே அமர்ந்தார் .மன்னன் தவறை உணர்ந்து புலவருக்குச் சிறப்பு செய்தான்.

9) . உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார் . அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள் ?

1. இளமையில் கல்வி கற்க வேண்டும் .
2. இளம் வயதில் படிப்பது வருங்காலத்தில் பெரிய வேலை வேலைவாய்ப்புக்கு உதவி செய்யும்.
3. அதனால் சிறிதும் யோசிக்காமல் பள்ளிக்குச் செல் . இப்பொழுது வேலைக்குச் செல்வதால் பிற்காலத்தில் படிக்கவில்லையே என்று வருத்தப்பட நேரிடும் .

10) முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை

இன்மை புகுத்தி விடும். - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

ஆற்றுநீர்ப் பொருள்கோள் இப்பாடலில் அமைந்துள்ளது .

ஆற்றில் நீர் தொடர்ச்சியாக ஓடுவதைப் போல , பாடலின் பொருள் தொடக்கம் முதல் முடிவு வரை நேராக பொருள்கொள்ளும் வகையில் அமைதல் ஆற்றுநீர்ப் பொருள்கோள் எனப்படும் .

பாடலின் பொருள் :

முயற்சி ஒருவருக்கு செல்வத்தை உண்டாக்கும் ; முயற்சி இல்லாமை வறுமையை உண்டாக்கும் வறுமையை உண்டாக்கிவிடும் .

11) ' கண்ணே கண்ணுறங்கு !

காலையில் நீயெழும்பு !

மாமழை பெய்கையிலே !

மாம்பூவே கண்ணுறங்கு !

பாடினேன் தாலாட்டு !

ஆடி ஆடி ஓய்ந்துறங்கு !

-- இத்தாலாட்டு பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

1 . கண்ணே கண்ணுறங்கு - விளித்தொடர்

2. காலையில் நீயெழும்பு - வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

3. மாமலை பெய்கையிலே - உரிச்சொல் தொடர்

4. மாம்பூவே கண்ணுறங்கு - விளித்தொடர்

5. பாடினேன் தாலாட்டு - வினைமுற்று தொடர்

6. ஆடி ஆடி ஓய்ந்துறங்கு - அடுக்குத்தொடர்

12) முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருட்கள் யாவை?

முல்லை நிலம்

காடும் காடு சார்ந்த பகுதி

உணவுப் பொருட்கள் : வரகு , சாமை , தினை , பால் , நெய் போன்றவை

மருத நிலம் :

வயலும் வயல் சார்ந்த இடமும்

உணவுப் பொருட்கள் : செந்நெல் , வெண்ணெல்

13) .புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்காக வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர் .

* திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காண முடிகிறது .

www.Padasalai.Net

இப்படியாகக் காலமாற்றம் , தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்து கருத்துகளை எழுதுக.

அமரும் திண்ணை இல்லாமை :

இன்று அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினராக ஏற்பது இல்லை .

இன்று வீட்டின் முன் உட்காருவதற்கு திண்ணை வைத்து கட்டுவதில்லை .

இருப்பினும் திருவிழாக்காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களை அழைத்து அன்போடு விருந்தளிப்பது சில இடங்களில் காணமுடிகிறது . காலமாற்றத்தால் இன்று திருவிழாக்கள், பண்டிகை நாட்கள் போன்றவற்றிற்கு சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்று விருந்தளிப்பது முறையாக உள்ளது .

14) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது ?

அசோக மரங்கள் நிறைந்த சிற்றூரை அடையுங்கள்.

நன்னனின் கூத்தன் என்று சொல்லுங்கள்.

உங்கள் வீடு போல அவர்கள் வீட்டிற்குள் செல்லுங்கள்.

நெய்யில் வெந்த மாமிசப் பொரியலுடன் தினைச்சோற்றைப் பெறுவீர்.

15) . வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்

கோலொடு நின்றான் இரவு

---குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

இக்குறளில் உவமைஅணி அமைந்துள்ளது.

ஒரு பொருளை ஒப்புமைப்படுத்தும் போது , உவமை தனித்தொடராகவும் உவமேயம் தனித் தொடராகவும் அமைந்து , இடையில் உவமஉருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

குறள் விளக்கம்:

வேலைக் கையில் ஏந்தி நின்று வழிப்பறி செய்யும் கள்வர்களைப் போல, ஆட்சியில் கொடுங்கோலைக் கையிலேந்தி குடிமக்களிடம் வரி விதித்து பொருள் பெறுவதாகும் .

அணிப் பொருத்தம்:

வேலொடு நின்றான் இடுஎன்றது - உவமை

கோலொடு நின்றான் இரவு - உவமேயம் ( பொருள் )

போலும் - உவம உருபு

16) நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது . வாழைத்தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது ; தந்தை என்னிடம், " இலச்சுமி கூப்பிடுகிறாள் , போய்ப் பார் " என்றார் . "

இதோ சென்றுவிட்டேன்" என்றவாறு அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, " என்னடா விளையாட வேண்டுமா?" கேட்டு அவனை அவிழ்த்துவிட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம், " இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.

இப்பதியில் உள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.

1 .நிறைந்திருந்தது ( நிறைந்தது ) - கால வழுவமைதி

2. வாழைத் தோப்பு (வாழைத் தோட்டம்) - மரபு வழுவமைதி

3. குட்டியுடன் நின்றிருந்த மாடு - கன்றுடன் நின்றிருந்த மாடு - திணை வழுவமைதி

4. இலச்சுமி கூப்பிடுகிறாள் ( இலச்சுமி கூப்பிடுகிறது) ( மாடு ) - திணை வழுவமைதி

5. இதோ சென்று விட்டேன் (சென்று விடுகிறேன் ) - கால வழுவமைதி

17 ) தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.

கலைஞர் தமிழக முதல்வராக இருந்தபோது மனோன்மணியம் சுந்தரனாரின் நீராருங் கடலுடுத்த என்னும் பாடலை அரசு விழாக்களில் தொடக்கப்பாடலாகப் பாடுவதற்கு வழிவகுத்தார்.

தமிழ் வளர்ச்சித்துறை எனப் புதிதாக ஒரு துறையை உருவாக்கி அதற்குத் தமிழறிஞர் ஒருவரையே அமைச்சராக்கினார்.2010 ஆம் ஆண்டு கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தினார்.

18) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள் வழி விளக்குக.

ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருப்பினும், உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும் .நாமும் நமக்குக் கொடுக்கப்பட்ட பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றிப் புகழ்ப்பெற முயற்சி செய்ய வேண்டும்.இது அமைச்சர்க்கு மட்டுமன்று அனைவருக்குமே.

19) பலரிடம் உதவி பெற்று கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை ?

சுற்றத்தாரிடம் ஒருவர் அன்பு இல்லாமலும் பொருந்திய துணை இல்லாமலும், வலிமை இல்லாமலும் இருந்தால் அவர் பகைவரின் வலிமையை வெல்லமுடியாது .

மனத்தில் துணிவு இல்லாதவராய் , பொருந்தும் பண்பு இல்லாதவராய் , பிறர்க்குக் கொடுத்து உதவாதவராய் இருந்தால் எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்

20) .முதல் மழை விழுந்ததும் ' என்னவெல்லாம் நிகழ்வதாக கு .ப. ராஜகோபாலன் கவிபாடுகிறார் ?

1.மேல் மண் பதமாகிவிட்டது .

2. வெள்ளி முளைத்திடுது ; காளைகளை ஓட்டி விரைவாகச் சென்று , காட்டைக் கீறுவோம் .

3. ஏர் புதிதல்ல ,.ஊக்கம் புதிது , ..

4. நிலம் சிலிர்க்கும் ; நாற்று நிமிரும் ; ; நல்ல வேளையில் உழவுத் தொழில் செய்வோம்.

21) அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர்புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான் ; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக .

. " வஞ்சித் திணை " இந்நிகழ்வுக்குப் பொருத்தமான திணை .

மண்ணாசை காரணமாக பகைவர் நாட்டைக் கைப்பற்ற , வஞ்சிப் பூவைச் சூடி போருக்குச் செல்வது வஞ்சித்திணை ஆகும் .

22) ." தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் " இடம் சுட்டிப் பொருள் விளக்குக .

இடம் :

" சிற்றகல் ஒளி " என்னும் மா . பொ. சிவஞானத்தின் ' எனது போராட்டம் ' தன்வரலாற்று நூலில் இடம்பெற்றுள்ளது. .

பொருள் :

ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னை தான் அதன் தலைநகரமாக இருக்க வேண்டும் என்று அதன் தலைவர்கள் கருதினர் . அதனை எதிர்த்து மாநகராட்சி சிறப்புக் கூட்டம் செங்கல்வராயன் தலைமையில் கூட்டி , சென்னை பற்றிய தீர்மானத்தை முன்மொழிந்து , ம .பொ.சி . முழங்கிய முழக்கமாகும் .

விளக்கம் :

சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திர மாநிலம் பிரியும்போது , சென்னை தான் அதன் தலைநகராக இருக்க வேண்டுமென ஆந்திர தலைவர்கள் கருதினர் . இதனை எதிர்த்து மாநகராட்சி சிறப்பு கூட்டம் ஒன்றை செங்கல்வராயன் தலைமையில் கூட்டி , " தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் " என்ற முழக்கத்தை ம. பொ .சி . முன்மொழிந்தார் .

23) பகர்வனர் திரிதரு நகர வீதியும் :

பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்

கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும் :

தூசும் துகிரும் ஆரமும் அகிலும் "

அ) இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது ?

ஆ) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக .

இ) எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக.

ஈ) காருகர் - பொருள் தருக .

உ) இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் யாவை ?

விடை :

அ) சிலப்பதிகாரம்

ஆ) பகர்வனர் , பட்டினும்

பட்டினம் , பருத்தி

இ) பகர்வனர், நகர வீதியும்

பட்டினம் , கூட்டு நுண்வினை

ஈ) நெய்பவர்

உ) சந்தனமும் அகிலும்

24) எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார் ?

* உயிர் பிழைக்கும் வழிவகை அறியேன்.

* உடலின் தன்மையை அறியேன்.

* உணவைத் தேடும் வழி அறியேன்.

* காட்டில் செல்லும் வழிகளையும் அறியேன்.

25) சித்தாளின் மனச்சுமைகள்

செங்கற்கள் அறியாது - இடஞ்சுட்டிப் பொருள் கூறுக.

இடம் :

சித்தாளு- என்னும் தலைப்பில் நாகூர் ரூமி எழுதிய கவிதையில் இடம்பெற்றுள்ள வரி.

பொருள் :

சித்தாளின் துன்பங்களைச் செங்கற்கள் அறிவது இல்லை.

விளக்கம் :

www.Padasalai.Net

அடுத்த வேளை உணவுக்காக சுமைகளை இறக்காமல் சுமக்கும் இவர்களின் மனச்சுமையைச் செங்கற்கள் அறியாது.

26) . வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

திருவடியில் உள்ள கிண்கிணிகளொடு செம்பொன் ஆடுகிறது.

இடுப்பில் உள்ள அரைவடங்கள் ஆடுகின்றன.

பசும்பொன் தொந்தியுடன் சிறுவயிறு ஆடுகிறது.

நெற்றிப் பொட்டுடன், சுட்டி ஆடுகிறது.

காதில் குண்டலமும், குழைகளும் ஆடுகின்றன

இவற்றுடன் அழகிய பவளம்போன்ற திருமேனி ஆடுகிறது.

27) வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

* ஈற்றடி மூன்றுசீராய் ஏனைய அடிகள் நான்கு சீராய் வரும்.

* செப்பலோசை பெற்று வரும்.

* இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை வரும்.

* ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு கொண்டு முடியும்.

28) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை விவரிக்க.

* ஈரசைச் சீரும் காய்ச்சீரும் வரும்.

* அகவல் ஓசை பெற்று வரும்.

* ஆசிரியத்தளை மிகுந்து வரும்.

* ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

29) கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி.

www.Padasalai.Net

எ.கா. - போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி

வாரல் என்பன போல் மறித்துக்கை காட்ட

கொடிகள் காற்றில் அசைவது இயற்கை. ஆனால் கோவலன் மதுரைக்குச் சென்றால் கொலை செய்யப்படுவான் எனக்கருதி அக்கொடிகள், அவனை செல்ல வேண்டாம் என்று தடுப்பதாக தம் மனக்கருத்தைக் கொடியின் மீது ஏற்றிக் கூறியுள்ளார்.

*வினா எண் 31 (உரைப்பத்தி வினா-விடை).* **மதிப்பெண்கள்** :3

*உரைப்பத்தி வினா விடைப் பகுதியில் புத்தகத்தில் மட்டுமல்லாமல் புதியதாகவும் தரப்படும். சொற்களையும் வரிகளையும் கவனமாக வாசிக்கவும். வினாக்களுக்கான விடைகள் பத்தியில் நேரடியாகவும் இல்லாமல் இருக்கலாம். இலக்கணக் குறிப்பு, பொருள் தருதல், பிரித்து எழுதுதல், எதிர்ச்சொல் தருதல் என எப்படி வேண்டுமானாலும் அமையலாம்.*

மாதிரி :1

*இடைக்காடனர் என்னும் புலவர், குசேலபாண்டிய மன்னன்முன்பாட, அதைப் பொருட்படுத்தால் அவமதித்தான். மனம் வருந்திய இடைக்காடனார் இறைவனிடம் முறையிட்டார். மன்னனின் பிழையை உணர்த்த, கடம்பவனக் கோவில் விட்டுவிட்டு, வடதிரு ஆலவாயில் சென்று தங்கினார். இதை அறிந்த மன்னன், பிழையை மன்னிக்க இறைவனை வேண்டி, இடைக்காடனாருக்குச் சிறப்பு செய்தான்.*

அ) இறைவன் எந்தக் கோயிலை விட்டு நீங்கினார் ?

கடம்பவனக் கோவில்

ஆ) இடைக்காடனார் இறைவனிடம் முறையிட்டது யாது ?

புலவர் இறைவனிடம் தம் பாடலை மன்னன் அவமதித்தாக முறையிட்டார்.

இ) இதை + அறிந்த - சேர்த்தெழுதுக.

இதையறிந்த.

வினா எண் : 41 படிவம் நிரப்புதல் ( மதிப்பெண்கள் :5)

1) நூலக உறுப்பினர் படிவம்

தஞ்சாவூர் மாவட்ட நூலக ஆணைக்குழு

அட்டை எண் : 0087 உறுப்பினர் எண் : 112114

1. பெயர் : அஅஅ

2. தந்தை பெயர் : தமிழ்

3. பிறந்த தேதி : 16-03-2008

4. வயது : 14

5. படிப்பு : பத்தாம் வகுப்பு

6. தொலைபேசி எண் : 9443740120

7. முகவரி. : 23, காந்தி நகர், கும்பகோணம் -612001.

காப்புத்தொகை :100, சந்தா தொகை 25, மொத்தம் :125.

தங்கள் உண்மையுள்ள,

2) மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண் : 2678 தேதி 14- 6- 2022 வகுப்பு, பிரிவு -11:அ

1. பெயர் : அஅஅ

2. பிறந்த தேதி : 16-03-2008

3. தேசிய இனம் : இந்தியன்

4. பெற்றோர் பெயர் : தமிழ்

www.Padasalai.Net

5. இல்ல முகவரி 14 , காந்தி நகர், கும்பகோணம்.

6. இறுதியாகப் படித்த வகுப்பு : 10 ஆம் வகுப்பு

7. பயின்ற மொழி : தமிழ்

8. பெற்ற மதிப்பெண்கள் : 479/500

9. இறுதியாகப் படித்த பள்ளி : அரசு உயர்நிலைப்பள்ளி. ஆஆஆஆ

(தமிழ் - 98 , ஆங்கிலம் - 91, கணிதம் - 97, அறிவியல் - 94, சமூக அறிவியல் -99)

10. மாற்றுச் சான்று உள்ளதா : ஆம்

11. தாய்மொழி. : தமிழ்.

3) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்.

1. பெயர் : அஅஅ

2. பாலினம் : ஆண்

3. பிறந்த தேதி : 16-03-2008

4. தேசிய இனம் : இந்தியன்

5 . பெற்றோர் பெயர் : தமிழ

6. இரத்த வகை : ஓ -

7. உயரம் மற்றும் எடை : 150 செ.மீ 43 கி

8. இல்ல முகவரி 14 , காந்தி நகர், கும்பகோணம்.

9. தொலைபேசி எண் : 9443740121

10. படித்த வகுப்பு : 10 ஆம் வகுப்பு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11. பள்ளி முகவரி : அரசு உயர்நிலைப்பள்ளி, ஆஆஆ

12. சேர விரும்பும் விளையாட்டு : கால்பந்து

4) பணிவாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல் நிரப்புதல்

1. பெயர் : அஅஅ

2. பாலினம் : ஆண

3. பிறந்த தேதி : 16-03-2008

4. தேசிய இனம் : இந்தியன்

5 . பெற்றோர் பெயர் : தமிழ்

6. இல்ல முகவரி 14 , காந்தி நகர், கும்பகோணம்.

7. தொலைபேசி எண் : 9443740121

8. 10 ஆம் வகுப்பில் மதிப்பெண். : 460/500

9. தாய்மொழி : தமிழ்

10. பயின்ற மொழிகள் : தமிழ், ஆங்கிலம்

11. தட்டச்சு : இளநிலை, முதுநிலை தேர்ச்சி

12. கணினி : ஆம்

மேற்கண்ட விவரங்கள் யாவும் உண்மையென உறுதி கூறுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன், பட்டதாரி ஆசிரியர் ( தமிழ் )

www.Padasalai.Net

பாணாதுறை .மேனிலைப்பள்ளி,

கும்பகோணம் செல் : 9443740120.

www.Padasalai.Net